1995 ஏப்ரல் 19]

349—

பச்சாபாளையத்தில் தொழிற்பேட்டை அமைத்தல்

***38865—**டாக்டர் மு.சீனியம்மாள்:

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அவினாசி தொகுதி, அன்னூர் ஊராட்சி ஒன்றியம் எல்லையோரத்தில் உள்ள பச்சாபாளையம் கிராமத்தில் அரசு தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அதுபற்றிய செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதி என்பது பின்தங்கிய வட்டம். அந்தத் தொகுதியை முன்னேற்ற வேண்டும் என்றுதான், இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களின் ஒரே தலைவியாக பிற்படுத்தப்பட்ட மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், நெசவாளத் தோழர்கள், தொழிலாளர்கள், சலவையாளர்கள் மற்றும் அனைத்துதரப்பு மக்களுக்கும் ஒவ்வொரு விதமாக பல நல்ல திட்டங்களை அறிவித்து, இன்றைக்கு தமிழகத்தில் தன்னிகர் இல்லாத ஆட்சியினைப் புரிந்து வரக்கூடிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் நல்லாட்சியில் அவினாசியை பிற்படுத்தப்பட்ட தாலுக்காவாக அறிவித்தார்கள். அன்னூர் ஒன்றியம் பச்சாபாளையத்தை பொறுத்தவரையில் தெற்கே பல்லடம் அதாவது பிற்படுத்தப்பட்ட தாலுக்காவினுடைய எல்லையும், வடக்கே கோவை மாவட்டத்தின் எல்லையும் அமைந்துள்ள பகுதியாகும். கோவையில் ஏராளமான தொழிற்சாலைகளும் பல்லடத்தில் ஏராளமான தொழிற்சாலைகளும் சீராக நடந்துக் கொண்டிருக்கின்றன. அவினாசி தொகுதியில் ஒரு சிட்கோ தொழிற்சாலை ஏற்படுத்துவதன் மூலம் சுற்றியுள்ள கிராம மக்களுக்கும், வேலையில்லாத இளைஞர்களுக்கும் வேலை கிடைக்க வாய்ப்பாக இருக்கும். பின்தங்கிய தாலுக்காவாக அது இருப்பதால் தொழில் முனைவோர்களுக்கு இதனால் பல சலுகைகள் கிடைக்கும். எனவே அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்து இந்தத் தொழில்பேட்டை அமைவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

[1995 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் 600-க்கும் அதிகமான தொழில் கூடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அவினாசி சிறு தொழில் சங்கம் 13.29 ஏக்கர் பட்டா நிலத்தை அவினாசி அருகே வேட்டுவப்பாளையம் என்ற கிராமத்தில் வாங்கி ஒரு தொழிற்பேட்டை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதுவும் அவினாசி தொகுதியில்தான் வருகிறது. அவினாசி தொகுதியைத் தொழில் துறையில் பின் தங்கிய தாலுக்கா என்று அறிவித்ததின் கீழ் இப்போது ஏராளமான தொழில் முனைவோர்கள் கோயம்புத்தூரில் இருந்து அவினாசி தொகுதியிலே புதிதாக தொழில்களை ஆரம்பித்துக்கொண்டு இருக்கிறார்கள். எப்படி இருந்தாலும் தொழில் முனைவோர்கள் குறைந்தது 25 பேர் முன்வந்தால் இதைப் பற்றி கனிவோடு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவினாசித் தொகுதியில் தொழிற்பேட்டை அமைப்பதாகக் கூறினார்கள். அதற்காக மனமார்ந்த நன்றியைத் கூறிக் கொள்கிறேன். ஆனால் அவினாசி தொகுதியிலிருந்து 30 கிலோ மீட்டர் 35 கிலோ மீட்டர் தூரத்திற்கு அருகிலே அன்னூர் ஒன்றியத்தில் இருக்கிற பச்சாபாளையம் என்பது ஒரு எல்லை முடிவில் இருக்கிறது. கோவை மாவட்டத்தில் எத்தனையோ தொழிற்சாலைகள் இருந்தாலும் கூட, மாதச் சம்பளத்தில் வேலைக்கு சென்று வருகிறபோது அதை வைத்து இரண்டு குடும்பமாக நடத்த முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. அரும்பு வியர்வை உதிர்த்து புவிமேல் ஆயிரம் தொழில்கள் செய்திட வேண்டும் என்ற பாரதியின் வாக்குக்கு ஏற்ப தொழிலில் புரட்சி செய்துகொண்டிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியில் இந்தத் தொழிற்பேட்டை அமைவதற்கு அரசினுடைய விதிமுறைகள் என்ன? தொழில் முனைவோர்கள் குறைந்தது 25 பேர்கள் இருக்க வேண்டும் என்று கூறினார்கள். அன்னூர் ஒன்றியமாக இருக்கிற காரணத்தாலும் பக்கத்திலே கோவை மாவட்டம் இருக்கிற காரணத்தாலும் 25 தொழில் முனைவோருக்குக் குறைவாக இருந்தால் அதற்கு என்ன விதி முறைகள்? இப்படி தொழில் முனைவோர்கள் வரும் பட்சத்தில் எவ்வளவு கால அளவிற்குள் இந்தத் தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? அவினாசியில் கொடுத்ததைப்போல அன்னூர் ஒன்றியத்திலும் இன்னும் ஒரு தொழிற்பேட்டை மாண்புமிகு புரட்சித் தலைவியின் உத்தரவைப் பெற்று அமைக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு

1995 ஏப்ரல் 19]

சிறு தொழில் முனைவோர்களுக்கு எல்லாவிதமான ஆக்கத்தையும், ஊக்கத்தையும் கொடுத்துக் கொண்டிருக்கிற அரசு, அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இந்த அரசு கனிவோடு பரிசீலிக்கும். 25 பேர்கள் தொழில் முனைவோர்கள் முன்வந்தால் உடனடியாக அங்கே தொழிற்பேட்டை ஆரம்பிக்க தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும். காலம் எவ்வளவு ஆகும் என்று கேட்டார்கள். எவ்வளவு விரைவாக அதைச் செய்து கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அதைச் செய்து கொடுக்க அரசு முனையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 350, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

350—

கல்வராயன் மலைப்பகுதியில் காகிதத் தொழிற்சாலை அமைத்தல்.

***26404—** *திரு. சி. இராமசுவாமி:*

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்கராபுரம் தொகுதியில் கல்வராயன் மலைப்பகுதியில் காகிதத் தொழிற்சாலை அமைக்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலைப்பகுதியில் காகித தொழிற்சாலை அமைக்கத் தேவையான மூலப் பொருட்கள், தண்ணீர் வசதி ஆகியவை இல்லை. எனவே, காகித ஆலை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப்பகுதி சங்கராபுரம் தொகுதியில் வருகிறது. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த சங்கராபுரம் தாலுக்காவை இண்டஸ்ட்ரியலி பேக்வர்ட் தாலுக்காவாக அறிவித்துள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு மூலப் பொருட்கள் இல்லை என்று சொன்னார்கள். காகிதத் தொழிற்சாலை துவங்கத் தேவையான மூங்கில், பகாஸ், (கரும்புச் சக்கைகள்) ஆகியவை கிடைக்கின்றன. இங்கு மூன்று சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து, சங்கராபுரம் தொகுதியில் காகித ஆலை அமைக்க முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.